**மஹர பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த 1.2.1(அ), 1.2.1(ஈ) பந்திகளின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.6 | நடப்பாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்குரிய காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உண்மையான அப் பெறுமதிகளுக்காக முன்னைய சமமான காலப்பகுதி தொடர்பாக இணக்கம் செய்யக்கூடிய தகவல்கள் ஒப்பீட்டுரீதியில் காண்பித்தல். | எதிர்வரும் ஆண்டுகளின் போது இது தொடர்பாக கவனத்தில் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 3.20 | பயன்படுத்தப்பட்ட சொத்துக்களின் பெறுமானத்தேய்வு முறை மற்றும் பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு விகிதம் | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் விதிக்கப்பட்டுள்ள மேல்மாகாண பிரதேச சபைகள் நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை இலக்கம் 83(ii) இன் பிரகாரம் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஊழியர் கடனுக்காக தனியாக முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளையின் பிரகாரம் தனியான ஊழியர் முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுப்பெறுமதி ரூபா 574,447,481 தொகையான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய கணக்கீட்டு கொள்கை மற்றும் கணக்கீட்டு விதிகள் தொடர்பாக நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க 2020 ஆம் ஆண்டில் புதிய கணக்கீட்டு கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ஆனமையால் அந்த வருடத்தில் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறித்துரைத்த பெறுமானத்தேய்வு வீதத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செயயப்படல் வேண்டும். |
| (இ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 32 விடயங்கள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த நிலையான சொத்து விடயங்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சபைக்குச் சொந்தமான சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிலையான வைப்பு வட்டி ரூபா 926,613 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட போதிலும் சரியான நிலையான வைப்பு வட்டி ரூபா 823,287 ஆனமையால் ரூபா 103,326 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | ஆயுர்வேத இருப்புக் கணக்கு தயாரிக்கும் போது நடப்பாண்டில் நுகரப்பட்ட இருப்பு பெறுமதி ரூபா 1,108,230 ஆக பதியப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான இருப்பு ரூபா 1,033,609 ஆனமையால் வேறுபாடு ரூபா 74,621 ஆகும். | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் கிடைக்கின்ற எஞ்சிய ஆயுர்வேத இருப்பு மற்றும் 2020.01.01 இல் உள்ளவாறான இருப்பின் பிரகாரம் கணிப்பீடு செய்து நுகரப்பட்ட இருப்பு பெறப்பட்டிருந்தது. | சரியான இருப்பு அறிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஊ) | நாட்குறிப்பு 1 இன் மூலம் ஆரம்ப மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் முன்னர் காணப்படாத இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 26,364,842 ஆரம்ப மீதியொன்று பதியப்பட்டிருந்தது. இந்த மீதியில் பெறவேண்டிய ரூபா 69,203,620 மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 42,388,781 மீதி காணப்பட்டதுடன் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியம இலக்கம் 15.13 இனதும் 15.1 இனதும் நியதிகளுக்கு முரணாக உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | புதிய கணக்கீட்டு கொள்கை மற்றும் கணக்கீட்டு விதிகள் தொடர்பாக நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கூட்டங்களுக்கு இணங்க உரிமை மூலதன மாற்றக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு விடயத்திற்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வைப்புக்களின் பெறுமதி ரூபா 43,381,673 மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதியின் பெறுமதி ரூபா 13,443,477 ஆனமையால் ரூபா 29,938,196 வேறுபாடு காணப்பட்டது. | வைப்புக்கள் மற்றும் நிலுவை ஆதனவரி கணக்குகளுக்கு சரியான மீதி இனங்காணப்படாது இருந்ததுடன் சரியான மீதி இனங்காணப்பட்டதன் பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,463,249 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,761,396 ஆகும்.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

#### 2.2.1 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 43 வியாபார உரிமையாளர்களிடமிருந்து வியாபாரம் மற்றும் கைத்தொழில் வரி ரூபா 98,000 தொகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலுவை பணமான ரூபா 58,000 தொகையை அறிவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் காணப்பட்ட கொவிட் 19 பரவலின் காரணமாக அதற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. | நிலுவை வரியை அறவிடும் செயற்பாடுகளை விருத்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 6,915,542 ஆக இருந்தது. | திட்டத்தின் பிரகாரம் நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வரியை அறவிடும் திட்ட முறைகளை விருத்தி செய்தல் வேண்டும். |
| (இ) | நிலுவை ஆதனவரி பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 5,366,123 மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 6,912,534 ஆனமையால் ரூபா 1,546,411 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிலுவை ஆதனவரி கணக்கில் சரியான மீதியை இனங்காண முடியாதிருந்ததுடன் சரியான மீதி இனங்காணப்பட்டதன் பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுக் காணிகளின் உரித்து மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமையின் காரணமாக வெலிபில்லேவ HPT தோட்டத்தில் 1 ஏக்கர் | இந்த நிலத்தின் உரித்தை மீளப்பெற்றுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுக்காணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 26 பேர்ச் அளவான காணிப் பகுதி வெளிநபரினால் அனுமதியற்ற வகையில் பிடித்து உரிமை கோரப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ‘‘புளுமவுன்டன்’’ நிறுவனத்திலிருந்து பொதுக் காணியாக சபைக்கு கிடைத்த 41.40 பேர்ச் பரப்பளவான காணி நீர்க் குழுகளுடன் உள்ள காணியாக இருந்ததுடன் அதனை பொதுக்காணியாக ஈடுபடுத்துதல் வசதியீனமாக காணப்பட்டது. மேலும் அதன் உரித்துறுதி சபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த நிலத்துக்குரிய உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் போது இந்த நிலத்துக்குரிய உரித்துறுதி தயாரிக்கப்பட்டதற்கும், தற்போது புளுமவுன்டன் நிறுவனம் செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்றமைக்கும் ஆன தகவல்கள் கிடைத்துள்ளது. தொடர்ந்தும் அதற்கான உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அவ்வாறு செய்யமுடியாது விடின் வெளியீட்டு உரித்துறுதியை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொதுக் காணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தக் கூடிய காணியாக இருக்க வேண்டியதுடன் உரித்தை உறுதிப்படுத்தக் கூடிய உரித்துறுதி காணப்படல் வேண்டும். |